ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1635/7 – 2010 ජනවාරි 04 වැනි සඳුදා – 2010.01.04
*1635/7 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III – காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணிஅமைச்சின் இல. : எல்டீ/05/2007/யுஊஏ/174.
குறிப்பு இல. : பெ/இ/3/சுவீ/39.

பொது விளையாட்டு மைதானம் ஒன்று நிர்மாணிப்பதற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், தெற்கு கிருவாபத்துவ பெலியத்தை பிரதேச செயலாளர் பிரிவில், குடாஹீல்ல கிராம அலுவலர் பிரிவில், குடாஹீல்ல கிராமத்தில் அமைந்துள்ள இறுதிக் கிராம வரைபட இல. 299 இல் துண்டு இல. 570 எனக் குறிப்பிடப்படும் விஸ்தீரணம் 0.6014 ஹெக்டயார் கொண்ட ஜூலஹேன அல்லது கொட்டுகொடெல்ல பன்சல் வத்த என்னும் காணியின் எல்லைகள் :

**துண்டு இல. 570 – ஜூலஹேன அல்லது கொட்டுகொடெல்ல பன்சல் வத்த (இ. கி. வ. 299) – விஸ்தீரணம் : 0.6014 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 39 ; கிழக்கு : துண்டு இல. 459, 550 மற்றும் 458 ; தெற்கு : துண்டு இல. 458, 457 மற்றும் 38 பி ; மேற்கு : துண்டு இல. 39.

ஆரம்ப உரிமை கோருவோர் : டப். டி. எஸ். ஜீ. பிரனீத் இந்திரசிரியும் இன்னும் ஆட்களும், இல. 90/15, திக்வெல்ல வீதி, பெலியத்தை, வித்தாரன்தெனிய ஹேமாலோக்க தேரர், சுமனானந்த சைத்திய ஆராமை, கொட்டுகொடெல்ல, திக்வெல்ல வீதி, பெலியத்தை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010.03.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பெலியத்தை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2010.03.10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திலேகா டப். சகபந்து,
பிரதேச செயலாளர்,
பெலியத்தை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பெலியத்தை,
2009.12.17.

01 – 528